Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 30, 2022

செவ்வாய்க்கிழமை, 30 ஓகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 088 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

கல்முனை பிரச்சினைக்கு வெள்ளிக்குள் தீர்வு

ஜனா, கலையரசன் எம்.பிக்களிடம் பிரதமர் உறுதி

■ கே.எல்.ரி.யுதாஜித்

கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலக பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் தீர்க்கமானதொரு நல்ல முடிவை வழங்குவதாக பிரதமரும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஸ் குணவர்தன உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஐ.எம்.எப் உதவியை பெற்றுக்கொள்ள

நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் கட்டாயம் இலங்கைக்கு உள்ளது.எனவே நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகளை செயற்படுத்தியாக வேண்டுமென வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ரூ.50க்கு முட்டையை விற்க பரிந்துரை

முட்டை ஒன்றை 50 ரூபாய்க்கு விற்பனை செய்யவதற்கு வியாபாரிகளுக்கு அனுமதி வழங்குமாறு, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு பரிந்துரைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

கோப், கோபா விடயத்தில்

ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு என்னவானது ?

எதிர்க்கட்சி தலைவர் சஜித் சபையில் கேள்வி

■ பா.நிரோஸ்

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) இதுவரையில் ஏன் நியமிக்கப்படவில்லை என பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்த ஐக்கிய மக்கள் சக்தியினர், குழுக்களின் தலைவர் பதவிகளை நிலையியற் கட்டளைக்கு அமைய எதிர்க்கட்சியான தமக்கே வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

தொடர்ச்சி P2

நிராகரிக்கிறது சீனா

இலங்கை, சீனாவுக்கு செலுத்த வேண்டிய 9.95 பில்லியன் டொலர் கடன்களை மறுசீரமைப்பதற்கு பதிலாக, இலங்கையில் உள்ள சீனாவின் அபிவிருத்தி திட்டங்களுக்கு அந்தக் கடனை ஈடு செய்ய விரும்புவதாக சீனா அறிவித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளை தாம் முழுமையாக நிராகரிப்பதாக சீன தூதரகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

சில முஸ்லிம் எம்.பிக்களின் தூண்டுதலில் ஜனாதிபதி செயற்படுகின்றாரா?

■ பா.நிரோஸ்

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் விவகாரத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் தூண்டுதல்களில் செயற்படுகிறாரா என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

மூவரும் ஆஜராகவில்லை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று (29) ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த அமைச்சர்களான பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர், ஆணைக்குழுவில் நேற்றையதினம் ஆஜராகவில்லை.

தொடர்ச்சி P2

பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி போராட்டம்

மின் கட்டண அதிகரிப்பு,அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இணைந்து பாராளுமன்ற நுழைவாயில் பகுதியான ஜெயந்திபுர சந்தியில் நேற்று (29) காலை போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2

செலவீனங்களை கடுமையாக குறைக்கும்

இடைக்கால பட்ஜெட் இன்றுதான் வருகிறது

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி அமைச்சர் என்ற ரீதியில் இடைக்கால வரவு-செலவு (பட்ஜெட்) திட்டத்தை இன்றைய தினம் (30) சமர்ப்பிக்கவுள்ளார். செலவீனங்களை பல மடங்கு குறைக்கவுள்ளார் என அறியமுடிகின்றது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில், சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான உதவிகளை அரசாங்கம் நாடியுள்ள நிலையில்,அவர்கள் முன்வைத்துள்ள வேலைத்திட்டத்திற்கு அமைய பாரிய அளவில் செலவுகளை குறைக்கும் இடைக்கால வரவு செலவு திட்டத்தையே இன்று ஜனாதிபதி முன்வைக்கவுள்ளதாக அரசாங்கத்தின் தரப்பில் அறிந்துகொள்ள முடிகின்றது.

இம்முறை, அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி தவிர்ந்து ஏனைய புதிய அபிவிருத்திகளுக்கான செலவீனங்கள் குறைக்கப்படும் எனவும், பாதுகாப்புக்கான ஒதுக்கீடு

தொடர்ச்சி P2

62.9 சதவீதமானோர் விண்ணப்பிக்க தகுதி

கடந்த 2021ஆம் ஆண்டின் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 62.9 சதவீதமானவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (28) வெளியிடப்பட்டுள்ளன. இதற்கமைய பாடசாலை அதிபர்கள், தமது பாடசாலை மாணவர்களின் உயர்தர பரீட்சை பெறுபேறுகளை நேற்று (29) முதல் பரீட்சை திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

மீண்டும் வரிசை

2 நாட்களில் எரிபொருள் வரிசைகள் குறைக்கப்படும் என்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சனிக்கிழமை (27) தெரிவித்திருந்த நிலையில், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்றும் (29) எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

தொடர்ச்சி P2

மின்வெட்டு நேரத்தை குறைப்பதில் சிக்கல்

உலை எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக நாட்டிலுள்ள பல மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

தொடர்ச்சி P2

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின்

49% பங்குகளை விற்க தீர்மானம்

401 பில்லியன் ரூபா கடனில் உள்ளதாம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைகள் நிறுவனத்தின் 49% பங்குகளை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு விற்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாவும், 51% பங்குகள் அரசாங்கத்தின் வசம் இருக்கும் எனவும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

தேசிய இணக்கப்பாடே பிரச்சினைக்கு தீர்வாகும்

நாட்டில் தேசிய இணக்கப்பாடு ஏற்பட்டால் மட்டுமே நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அதேபோன்று 19வது திருத்தச்சட்டத்தை அமல்படுத்தி ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை உடனடியாக பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

செப்டெம்பர் 4இல் 'வரலாற்று கூட்டணி'

பாராளுமன்றத்தில் சுயாதீன அணியாக தம்மை அறிவித்துக்கொண்டுள்ள ஆளுந்தரப்பு பங்காளிக்கட்சிகள், மேலும் சில கட்சிகளை இணைத்துக்கொண்டு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி, 'வரலாற்று கூட்டணி' யை உருவாக்கவுள்ளதாக சுயாதீன அணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

சீன அதிகாரிகளின் செலவுகளும்

மக்களின் மின்சாரக் கட்டணத்தில் சேர்கிறது

■ பா.நிரோஸ்

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் உள்ள சீன நிறுவனத்தின் அதிகாரிகளுக்காக 12 வருடங்களாக பெருமளவு பணம் செலவிடப்படுவதாகவும், இந்த செலவுகளும் மக்களின் மின்சாரக் கட்டணத்திலேயே வருகின்றது என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜீபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்

பாராளுமன்றத்தில் நேற்று(29) இடம்பெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்கட்டண அதிகரிப்பிற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. உற்பத்தி செலவு நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் பல்வேறு சேவை கட்டணங்கள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது என்றார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் நாட்டு மக்கள் குறிப்பாக வறுமை கோட்டில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏழ்மை நிலையில் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனைகளை சர்வதேச நிறுவனங்கள் நிபந்தனைகளுடன் முன்வைத்துள்ளன. வாழ்வில் ஒருமுறை கூட விமானத்தில் பயணம் செய்யாதவர்கள் ஸ்ரீ லங்கன் விமான சேவையின் நஷ்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள இடம்பெறும் பேச்சுவார்த்தை தொடர்பில் அரசியல் மட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு பலவந்தமான முறையில் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் தேவை இலங்கைக்கு உள்ளது என்றார்.

ஆகவே, நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகளை செயற்படுத்த வேண்டும். நஷ்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் தொடர்ந்து நடுத்தர மக்களை நெருக்கடிக்குள் உள்ளாக்குவது நியாயமற்றது. நஷ்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காவிடின் நாட்டு மக்களுக்கான அடிப்படை நலன்புரி சேவைகளை கூட வழங்க முடியாத நிலை ஏற்படும் என்றார்.

ரூ.50க்கு முட்டையை விற்க பரிந்துரை

பொருட்களின் விலை குறித்து ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

19ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாயாகவும் பழுப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டு, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

எனினும், சந்தையில் இன்னும் முட்டை ஒன்று 60 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு என்னவானது ?

தற்போதைய ஜனாதிபதி, எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கும்போது அவரும் கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சியினருக்கு வழங்க வேண்டும் என உறுதியளித்திருந்தார். தற்போது அந்த உறுதிமொழிக்கு என்ன நடந்தது எனவும் சஜித் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (29) அமர்வில் கலந்துகொண்டிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, கோப், கோபா குழுக்கள் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சி தலைவராக இருக்கும்போது கோப் குழுவின் தலைவர் பதவியை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த மக்கள் விடுதலை முன்னணியின் எம்.பி சுனில் ஹந்துநெத்திக்கு வழங்கியிருந்தார். இவ்வாறான நிலையில் இதுவரையில் கோப், கோபா குழுக்களின் உறுப்பினர்கள், தலைவர்கள் நியமிக்கப்படவில்லை. தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்கக்கூடாது என்றா இக்குழுக்களை நியமிக்காது இருக்கிறீர்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சபாநாயகர் வெளிநாடு சென்றிருப்பதால் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பானக் குழுக் கூட்டத்தில், சபாநாயகரால் கலந்துக்கொள்ள முடியாதுபோனது. சபாநாயகர் நாட்டுக்கு திரும்பியுள்ளார். எனவே ஆளும், எதிர்க்கட்சியின் இணக்கப்பாட்டுடன் கோப், கோபா குழுக்கள் நியமிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கல்முனை பிரச்சினைக்கு வெள்ளிக்குள் தீர்வு

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலக விவகாரம் தானும் த.கலையரசன் எமம்.பியும் சந்தித்து கலந்தரையாடிய வேளையிலேயே இதனை பிரதமர் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இந்த சந்திப்பு நேற்று (29) திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

சுமார் 15 நிமிடங்கள் நடைபெற்ற இச் சந்திப்பில், கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலகம் தொடர்பான குழப்பநிலை மற்றும் அண்மைய பொது நிருவாக அமைச்சின் இணையத்தளத்திலிருந்து கல்முனை தமிழ்ப்பிரிவு அகற்றப்பட்டமை, நீண்டகாலமாக இருந்து வருகின்ற கணக்காளர் நியமிக்கப்படாத பிரச்சினை, காணிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இக் கலந்துயாடலின் அடிப்படையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கல்முனை வடக்கு (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகக் குழப்பங்களுக்குச் சரியானதொரு தீர்க்கமான தீர்வை வழங்குவதாக பிரதமர் உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்.

சில முஸ்லிம் எம்.பிக்களின் தூண்டுதலில் ஜனாதிபதி செயற்படுகின்றாரா?

கடந்த 33 வருடங்களாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தொடர்பில் தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். இவ்வாறான நிலையில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் நீக்கப்பட்டு, கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே திட்டமிட்ட வகையில் பகையை வளர்ப்பதற்காக இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள்? அமைச்சரவை பத்திரம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டனவா? அவ்வாறு இருந்தால் யார் அந்த அமைச்சரவைப் பத்திரத்தை தாக்குல் செய்தது? எனவும் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கூட்டமைப்பு சந்தித்தபோது கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் விவகாரம் தொடர்பில் பேசப்பட்டதாகக் கூறினார்கள். இவ்வாறான நிலையிலும் இதுபோன்ற விடயங்கள் நடக்கிறது என்றால், ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் தூண்டுதல்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறாரா? எனவும் கேள்வி எழுப்பினார். பிரதமர் தினேஸ் குணவர்தனவா இதற்கு அனுமதி வழங்கினார்? இதுவொரு இனவாதச் செயற்பாடு எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி போராட்டம்

மின் கட்டண அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவற்றின் விலைகளை குறைக்குமாறு கோரியும் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் எதிர்க்கட்சியினர் சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றனர். எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தினால் பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் பொலிஸாரினால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நிராகரிக்கிறது சீனா

இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடன்களை மறுசீரமைக்க இலங்கை அரசாங்கம் சீனாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முயற்சிக்கின்ற போதிலும் அதற்கு சீனா இணக்கம் தெரிவிக்கவில்லை எனவும், இந்த நிலையில், கடன் கொடுப்பனவை பிற்போடுவதற்குப் பதிலாக இலங்கையில் சீனத் திட்டங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போவதாகவும் அதற்கான பணத்தை செலுத்த தீர்மானித்துள்ளதாகவும் இராஜதந்திர மட்டத்தில் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், இலங்கையில் உள்ள சீன தூதரகம் அதனை நிராகரித்துள்ளது.

இலங்கையின் நிலைமையை நன்றாக அறிந்து இலங்கைக்கு தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளதாகவும், கடன் மறுசீரமைப்பு விவகாரங்கள் இன்னமும் கலந்துரையாடல் மட்டத்தை அடையவில்லை எனவும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இடைக்கால பட்ஜெட்...

நலன்புரி திட்டங்களிற்காகவும் கடனை திரும்பி செலுத்துவதற்காகவும் அந்த நிதியை பயன்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்திருந்தார். அதற்கமைய கடினமான ஒரு வரவு செலவுத் திட்டமாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று இடைக்கால வரவுசெலவு திட்டத்தை சமர்ப்பிப்பதுடன் எதிர்வரும் 2 ஆம் திகதி வர இடைக்கால வரவுசெலவு திட்டம் மீதான விவாதம் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய பாராளுமன்ற அமர்வுகள் பி.ப 1.00 மணிக்குக் கூடவிருப்பதுடன், பி.ப 1.00 மணி முதல் 2.00 மணிவரை ஜனாதிபதியினால் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு முன்வைக்கப்படும். அதன் பின்னர் பாராளுமன்றம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர், ஓகஸ்ட் 31 மற்றும் செப்டெம்பர் 1 ஆகிய தினங்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை ஒதுக்கீட்டுத் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் மதியபோசன இடைவேளை இன்றி நடத்தப்படவுள்ளது. அத்துடன், செப்டெம்பர் 02ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.30 மணிவரை ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவிருப்பதுடன், இதன் பின்னர் குழு நிலை மற்றும் மூன்றாவது வாசிப்பு இடம்பெற்று சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்நிலையில் நேற்றைய (29) எமது மின்னிதழில், 'இன்று பட்ஜெட் ' எனும் தலைப்பில் கீழான செய்தி தவறானது என்பதுடன் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம் (ஆர்)

மூவரும் ஆஜராகவில்லை

பாராளுமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதால், ஆணைக்குழுவுக்கு வருவதற்கு பிறிதொரு தினத்தை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது, எம்.பிக்களின் வீடுகள் எரிக்கப்பட்டதுடன், சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

குறித்த எம்.பிக்கள் தமது வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமைக்கு அமையவே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

62.9 சதவீதமானோர் விண்ணப்பிக்க தகுதி

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைக்கு இரண்டு இலட்சத்து 72,682 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இதற்கமைய 236,035 பாடசாலை பரீட்சார்த்திகளும், 36,647 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இப்பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளனர்.

பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளில் 149,946 பாடசாலை பரீட்சார்த்திகளும், 21,551 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 171,497 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய இணக்கப்பாடே பிரச்சினைக்கு தீர்வாகும்

இந்த நாட்டின் வரலாற்றில் இதுவரை பார்த்திராத பல தேசிய நெருக்கடிகளை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். இலங்கை ஏற்கனவே வங்குரோத்து நாடாக சர்வதேச ரீதியில் பெயரிடப்பட்டுள்ளது. பொருளாதாரம் முற்றாக அழிந்துவிட்டது. அதனுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்று முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. நாட்டில் தேசிய ஒருமித்த கருத்து ஏற்பட்டால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். துரதிர்ஷ்டவசமாக, அது இன்னும் நடைபெறவில்லை.

ஒரு தேசிய இயக்கம் என்ற ரீதியில், அனைத்து தேசிய தலைவர்களும், அரசியல் பாகுபாடின்றி, பாராளுமன்றத்தின் மூலம் தீர்வு காண்பதற்கு ஒன்றிணைய வேண்டும் என நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே பரிந்துரைத்து வருகிறோம். அப்போது மக்கள் முழு பாராளுமன்றத்தையும் குற்றம் சாட்ட மாட்டார்கள். அப்போது, அரசியல் தலைவர்களின் முழுப் பங்கேற்புடனும், மக்களின் ஆசீர்வாதத்துடனும், வாதப் பிரதிவாதங்கள் இல்லாமல் நம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொழிற்சங்க மற்றும் மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். அப்படியானால், உடனடியாக நடக்க வேண்டியது நாட்டையும், மக்களின் வாழ்க்கையையும் மீட்டெடுத்து, பாராளுமன்றத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் ஆசியுடன் ஓராண்டு காலம் ஒன்றிணைந்து செயல்பட்டு நாட்டை விழுந்துள்ள பள்ளத்தில் இருந்து மீட்டெடுப்பதுதான். மேலும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் 19வது திருத்தம் அமுல்படுத்தப்பட உள்ளது.

மீண்டும் வரிசை

எரிபொருள் இருப்பு இல்லாத காரணத்தால் நேற்றும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன், டீசல் இல்லை அல்லது பெற்றோல் இல்லை என்ற பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

எரிபொருள் நிலையங்களால் முற்பதிவு கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதாக அமைச்சர் தெரிவித்திருந்த போதும், எரிபொருளை முற்பதிவு செய்த போதிலும் உரிய தொகுதி கிடைப்பதில்லை என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், நாட்டிலுள்ள 60 சதவீதமான எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சிலோன் பெற்றோலியம் சேமிப்பு முனையத்தின் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை மூலம் அறிவித்திருந்தது.

எனினும், முத்துராஜவெல முனையத்தில் இருந்து பெற்றோல் விநியோகிப்படுவதில்லை என்று விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்வெட்டு நேரத்தை...

இதன் காரணமாக, அனல்மின் நிலைய செயற்பாடுகள் குறைவடைந்துள்ள நிலையில், நாளாந்த மின்வெட்டை மூன்று மணித்தியாலங்களாக அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் சபை சுட்டிக்காட்டியது.

யுகதனவி, சபுகஸ்கந்த உள்ளிட்ட மின்னிலையங்களின் செயல்பாட்டுக்கு 2,500 மெற்றிக் தொன் உலை எண்ணெய் தேவைப்படுகின்றபோதும் 1,400 தொன் எண்ணெய் மாத்திரமே கிடைப்பதாகவும் மின்சார சபை தெரிவித்தது.

இதனால் அனல் மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படும் என மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நீர் மற்றும் நிலக்கரி அனல் மின் நிலையங்கள் வழங்கும் மின் திறன் நாட்டின் தேவைக்கான மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு போதுமானதாக இல்லை என்றும் சபை தெரிவித்தது.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள் மீள ஆரம்பித்துள்ளமையால், மின்சார தேவையான உலை எண்ணெய் விரைவில் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்தது.

49% பங்குகளை விற்க தீர்மானம்

தற்போது வரையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைகள் நிறுவனம் 401 பில்லியன் ரூபாய் கடனில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாரிய கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைகள் நிறுவனத்தை மீட்க இருக்கும் ஒரே வழிமுறை அதன் கட்டமைப்பை மீள் மறுசீரமைப்பு செய்வது மட்டுமேயாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் கடன்களை பொறுத்தவரையில், பிணை முறிகளாக 175 மில்லியன் அமெரிக்க டொலர் கடனும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேட்டரிங் பங்குகளில் 80 மில்லியன் அமெரிக்க டொலர் கடனும், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் பெற்றுக்கொண்ட கடனாக 386 மில்லியன் அமெரிக்க டொலர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், விமான நிலையம் மற்றும் சேவைகள் தனியார் நிறுவனம், இலங்கை விமான சேவைகள் அதிகாரசபைக்கு 325 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக செலுத்த வேண்டியுள்ளது. வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் விமானங்களுக்காக 80 மில்லியன் அமெரிக்க டொலரையும் செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே ஒட்டுமொத்தமாக 1046 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் உள்ளோம். இலங்கை ரூபாயின் பெறுமதியை 401 பில்லியன் கடன்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

செப்டெம்பர் 4இல் 'வரலாற்று கூட்டணி'

கொழும்பில் நேற்று (29) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். வரலாற்றில் மிகப்பெரிய கூட்டணியாக இது அமையும் எனவும், இந்த புதிய "வரலாற்று" கூட்டணியை செப்டம்பர் 04 ஆம் திகதி, மஹரகமவில் வைத்து அறிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது ஒரு முற்போக்கான, மக்கள் சார்பு கூட்டணியாக இருக்கும், தற்போதைய நெருக்கடியை சமாளிக்க மட்டுமல்ல, எதிர்கால சவால்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய ஒன்றாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களால் ஒருமித்த கருத்துக்கு வரமுடியவில்லை. கட்சிகள் நெருக்கடியைத் தீர்க்கும் திட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அவர்களின் தனிப்பட்ட நலன்களைப் பார்க்கின்றனர் என்று அவர் குற்றம் சாட்டினார்.

மக்களின் மின்சாரக்...

பாராளுமன்றத்தில் நேற்று (29) நடைபெற்ற மின்சார கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இவர்களுக்காக செலவிடும் பணமும் இறுதியில் மின்சாரக் கட்டணத்தில் சேர்ந்து பாவனையாளர்களுக்கே செலுத்த வேண்டிவந்துள்ளது. ஆகவே ஏன் சீன நிறுவன அதிகாரிகளை இன்னும் வைத்துக்கொண்டு இருக்கின்றீர்கள் என்று கேட்கின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையால் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளமையினால் பெரும் வாழ்க்கைச் செலவினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மின் கட்டணத்தை அதிகரித்து மக்கள் மீது மேலும் சுமைகளை அதிகரித்துள்ளனர். இது சிறிய மற்றும் பெரிய நிறுவனங்களுக்கான முதலீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறு மக்கள் மீது சுமைகளை சுமத்துவது அநீதியானது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை

நீக்குவதற்கான அதிகாரம் யாரால் வழங்கப்பட்டது?

கூட்டமைப்பின் கலையரசன் எம்.பி. சபையில் ஆவேசம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை இல்லாமல் செய்கின்ற விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் சில அடிப்படைவாத சிந்தனை கொண்ட அமைப்புகளும் தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருப்பதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.யான கலையரசன் சபையில் குற்றம் சுமத்தினார். அமைச்சரவை தீர்மானமொன்று எடுக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நீக்குவதற்கான அதிகாரம் யாரால் வழங்கப்பட்டது எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (29) இடம்பெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகம் இன்று வரைக்கும் ஒரு பூரண பிரதேச செயலகமாக அதிகாரத்துடன் இயங்கிக்கொண்டிருக்கின்றது. கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகமும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் நாவிதன் வெளி பிரதேச செயலகமும் அவ்வாறுதான் இயங்குகின்றது. வவுனியா மாவட்டத்திலும் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்றார்.

பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

எம்.பிக்களுக்கான கலந்துரையாடல் ஓகஸ்ட் 31 ஆம் திகதி இடம்பெறும்

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி எனும் தலைப்பில் 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி பி.ப. 2.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பாராளுமன்றக் கட்டத்தொகுதியில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணங்களால் அன்றைய தினம் இடம்பெறாது எனவும் அந்த நிகழ்வு 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை பாராளுமன்ற குழு அறை இலக்கம் 01 இல் நடைபெறும் எனவும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (29) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

நிதி விடயங்கள் தொடர்பான எதிர்கால பாராளுமன்ற விவாதங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினைத்திறனாக பங்குபற்றுவதற்கு பயனுள்ள வகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி பற்றிய உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்தக் கலந்துரையாடலை இலங்கை மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நடாத்தவுள்ளார்.

சம்பிக்கவுக்கு வழங்குங்கள்

சபையில் காஞ்சன கோரிக்கை

எரிபொருள், நிலக்கரி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர பிரதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். பாராளுமன்ற குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சியினர் தங்களுக்கு வழங்க வேண்டும் என கூறி வருகிறார்கள். இவ்வாறான நிலையில் எரிபொருள், நிலக்கரி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைத்து அதன் தலைவர் பதவியை எதிர்க்கட்சி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

எரிபொருளை குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு அவற்றை விநியோகிக்க முடியும் என எதிர்க்கட்சி எம்.பி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் பலர் கூறி வருகிறார்கள்.

எனவே இப்பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை சம்பிக்கவுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை ஒன்றை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

பொதுமன்னிப்புக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்புக் கடிதத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தின் நேற்றைய (29) அமர்வில் கலந்துக்கொண்டிருந்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

பொதுமன்னிப்பு கடிதத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். எனவே அதனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியுமா எனவும் நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இதேவேளை ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக் கடிதத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக நீதி அமைச்சர் விஜேயதாச உறுதியளித்தார்.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைத்தது

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த 9 மனுக்கள் தொடர்பான உயர் நீதிமன்றின் வியாக்கியானம் சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று(29) பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடிய நிலையில் இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 22ஆம் திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 9 மனுக்கள் மீதான பரிசீலனை அண்மையில் நிறைவடைந்திருந்தது. 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள், அரசியலமைப்புக்கு முரணானது என அறிவிக்குமாறு கோரி, சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு, கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட 9 பேரினால் குறித்த மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த மனுக்களில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டிருந்தார்.

கோரிக்கையை ஏற்றார் சம்பிக்க

எரிபொருள், நிலக்கரி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமித்து, அதன் தலைவர் பதவியை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுக்கு வழங்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சம்பிக்க ரணவக்க எம்.பி, எரிபொருள், நிலக்கரி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை ஏற்பதாகவும் சபைக்கு அறிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான

மதிய உணவு திட்டத்தை அமல்படுத்த வேண்டும்

மந்தபோசனை அதிகளவாக உள்ள நாடுகளின் பட்டியலில் 7ஆவது இடத்திலும், தெற்காசியாவில் இரண்டாம் இடத்திலும் இலங்கை இருப்பதாக யுனிசெப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பான பாராளுமன்ற விவாதம் வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் இந்த வாரத்திலேயே சுகாதார அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும். நாட்டின் எதிர்கால பிள்ளைகளுக்கு போசாக்கான உணவு இல்லை. நாடு வங்குரோத்தடைந்துள்ளது. எனவே நிவாரணங்களை வழங்க முடியாதென அரசாங்கத்தால் கூற முடியும். ஆனாலும் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கு 4000 மில்லியன்களை அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது என்றார்.

வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவால் கொண்டுவரப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு திட்டத்தை விரைவாக அமல்படுத்த வேண்டும். இடைக்கால வரவு செலவு திட்டத்தில் இந்த விடயம் உள்ளீர்க்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் இது தொடர்பில் விவாதம் ஒன்றும் நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வுக்கு பின்னால் ஐ.எம்.எப் நிபந்தனைகள் உள்ளன

நாட்டில் பொருட்களின் விலைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளின் கட்டண அதிகரிப்புகளுக்கு பின்னால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே உள்ளன என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த நான்கு - ஐந்து மாதங்களில் எரிபொருள், எரிவாயு விலைகள், மின்சாரக் கட்டணங்கள், பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. தற்போது கோதுமை மா விலை அதிகரித்துள்ளது. இதனால் மீண்டும் பாண் விலையும் உயவும். இறுதியில் இதன் சுமைகள் மக்கள் மீது சுமத்தப்படுகின்றது.

மின்சார சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு தவறான செயற்பாடுகளால் இப்போது கட்டண அதிகரிப்பாக மக்கள் மீது சுமத்தப்படுகின்றது. இதற்கு அதிகாரிகளே காரணம். நாட்டுக்கென தேசிய மின்சார உற்பத்தி திட்டம் உள்ளது. ஆனால் அதற்கமைய நடக்காது அவசர கொள்வனவுகளை செய்கின்றனர். இதனால் ஊழல் மோசடிகளே நடக்கின்றன. இதனை இறுதியில் மக்கள் மீது சுமத்திவிட்டு தவறான தீர்மானங்களை அதிகாரிகள் நழுவிச் சென்றுவிடுகின்றனர். சம்பந்தப்படாத மக்களே அந்த சுமைகளை சுமக்க நேரிடுகின்றது.

ஏன் இப்போது அவசரமாக விலை அதிகரிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்கள் உள்ளன. இதனை மறைக்க தேவையில்லை. மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தினால் எமது அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள ஆவணத்தில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதில் வரிச் சலுகைகளை குறைத்தல், ரூபா பெறுமதியை குறைத்தல், அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்தல், செலவுகளை குறைத்தல் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் இறுதியாக கூறப்பட்டுள்ள ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தவிர்ந்த மற்றைய அனைத்தையும் செய்துள்ளனர் என்றார்.

ரணிலுடன் பயணிப்பது மொட்டுக்கு பாரிய சவால்

ஐக்கிய தேசிய கட்சியை கட்டியெழுப்ப நினைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிப்பதே மொட்டுக் கட்சிக்கு தற்போதுள்ள பாரிய சவால் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபையில் தெரிவித்தார்.

நாட்டின் எரிவாயு கட்டமைப்பை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த இருவர் எதிர்த்தனர். இதனால் அவர்களது அமைச்சுகள் பறிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து நானும் எனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகினேன். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பொதுஜன பெரமுன பயணிப்பது சவாலான ஒன்று. ஜனாதிபதி ரணில் ஐக்கிய தேசிய கட்சியை வலுப்படுத்தவே பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தின்

அவசர உதவி வழங்கல்

விசேட கலந்துரையாடல்

■ ஹஸ்பர்

சர்வதேச உணவுத் திட்டத்தின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு, மக்களுக்கான நிதி உதவி வழங்கல் தொடர்பான கலந்துரையாடல், தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்று (29) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இத்திட்டம், 25 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ, சேருவில, தம்பலகாமம், வெருகல் ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இத் திட்டத்தின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 15,000 ரூபாய் பணம் வெஸ்டன் யுனியன் சேவை ஊடாக வழங்கப்படவுள்ளது.

இதில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், சமுர்த்தி பயனாளிகள், விசேட தேவையுடையோர்கள் போன்ற குழுக்களை வைத்து உள்ளடக்கப்பட்ட நிலையில் பயனாளிகள் பயன் பெறவுள்ளனர்.

குறித்த கொடுப்பனவானது ஓகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மூன்று மாத காலத்துக்கு முதற் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

இதற்காக தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 2,432 பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் சர்வதேச உணவு திட்டத்தின் (WFP) திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பத்மரஞ்சனி கேதீஸ்வரன், உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், பிரதம முகாமைத்துவ உதவியாளர் நிகாத் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தமிழரசுக் கட்சியின்

மாவட்ட கிளை தெரிவு

■ அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் நியமிக்கப்பட்ட மறுசீரமைப்பு குழுவின் தலைமையில், கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில்லுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளின் அடிப்படையில் மூல கிளைகள் உருவாக்கப்பட்டு, அதனுடாக திருகோணமலை, பட்டினமும் சூழலும், தம்பலகாம்ம், மூதூர், வெருகல் மற்றும் திரியாய் என ஆறு கோட்டங்களாக உருவாக்கி, மீண்டும் அதில் இருந்து தெரிவு செய்யப்பட்டு மாவட்டக் குழு தெரிவுகள் நடைபெற்றன.

இதன்போது மாவட்டத் தலைவராக கட்சியின் மூத்த மத்திய குழு உறுப்பினர் ச.குகதாசன் தலைவராகவும், நகராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவர். க.செல்வராஜா (சுப்ரா) செயலாளராகவும் மீண்டும் போட்டி எதுவும்மில்லாமல் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

பொருளாளராக பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வெ.சுரேஸ் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். உப தலைவராக விஜயகுமார் மற்றும் உப செயளாலராக இரா.இரட்னசிங்கம் தெரிவுசெய்யப்பட்டனர்.

உப செயலாளர் தெரிவுக்கு வெருகல் கோட்ட தலைவர் சுந்தரலிங்கம் முன்மொழியபட்டு, அவர் அத்தெரிவில் இருந்து தானாகவே விலகியமை குறிப்பிடத்தக்கது.

கோவில் தேவைக்கு திருட்டுப்பொருட்கள்

இருவருக்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருட்டுப் பொருட்களை வாங்கிய இருவரை, இன்று (30) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான், நேற்று முன்தினம் (28) உத்தரவிட்டார்.

திருகோணமலை - மனையாவெளி பகுதியைச் சேர்ந்த 52 மற்றும் 38 வயதுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

மனையாவெளி பகுதியிலுள்ள கோவில் ஒன்றின் தர்மகர்த்தா மற்றும் கோவில் சாரதி ஒருவருமே 58,500 ரூபாய்க்கு திருட்டுப் பொருட்களை வாங்கியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் தாம்பலம் - 6, குடம் - 4, விளக்குகள் பெரிது - 2, சின்னவிளக்கு - 2, ஒலிபெருக்கி சாதனங்கள், ஒட்ட தீபம் - 2, ஆழவட்டம் - 2, விசிறி - 1, கொடி 2 மற்றும் சாமரை - 1 போன்ற திருட்டுப் பொருட்களை வாங்கி வைத்திருந்த நிலையில் சந்தேகநபர்களை கைதுசெய்து, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த போதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வட்டமடு விவசாயிகளின்

பிரச்சினைகள் ஆராய்வு

■ நாருள் ஹுதா உமர்

மிக நீண்டகாலமாக பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வரும் வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் அம்பாறை அரசாங்க அதிபர் எஸ். டக்ளஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு, அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று (29) இடம்பெற்றது.

வட்டமடு விவசாயிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைகளை ஆழமாக முன்வைத்ததுடன் அதற்கான தீர்வை அவசரமாக எடுக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

சம காலத்தில் உள்ள நெருக்கடி நிலையில் விவசாயிகள் படும் கஷ்டநிலை, உரப் பிரச்சினைகள் உட்பட விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வைப் பெற வேண்டும் என்பதில் தான் உடன்பாட்டுடன் இருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி துரிதகதியில் எடுப்பதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது உறுதியளித்தார்.

'என் இனிய பட்டாம் பூச்சிக்கு'

நூல் அறிமுக விழா

■ பைஷல் இஸ்மாயில்

வி.மைக்கல் கொலினின் "என் இனிய பட்டாம் பூச்சிக்கு"எனும் கவிதை நூல் அறிமுக விழா, திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து. ரகுராம் தலைமையில், திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் (28) மாலை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

தடை நீக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களுடன் கூட்டமைப்பு

பேச்சுக்களில் ஈடுபடவில்லை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வடக்கு, கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அரசால் தடை நீக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களுடன் இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் ஈடுபடவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "இடைக்கால நிர்வாகம் குறித்து தற்பொழுது பல்வேறு தரப்பினரும் பல்வேறான கருத்துகளை கூறி வருகின்றனர். இடைக்கால நிர்வாகம் என்பதற்கு நாங்கள் பல்வேறு அனுபவங்களைக் கொண்டவர்கள். ஏற்கெனவே 1987ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசுகள் செயற்பட்டுக் கொண்டிருந்ததன் அடிப்படையில், ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்ட அந்த இடைக்கால நிர்வாகம் எழுத்துருவுடன் முடிவு பெற்றது.

"தற்பொழுது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பில் கருத்துகளை தெரிவித்து, அதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வருமாறு அழைப்பது தொடர்பில் பத்திரிகைகளில் பார்க்கின்றோம்.

"ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படுகின்றபொழுது, மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயமானது, இடைக்கால நிர்வாகம் தொடர்பில் கருத்துகள் ஏன் உருவாகுகின்றது என்றால், புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற டயலஸ்போறா தமிழர்களுடைய முதலீடுகளை நாட்டுக்குக் கொண்டு வருவதுதான் மிக முக்கியமான நோக்கமாக இருக்கின்றது.

"பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு, தற்காலிகமாக ஓர் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கினால், அதிலும் வடக்கு, கிழக்கு இணைந்ததாக உருவாக்கப்பட்டு, அதனை உலக வங்கி அல்லது ஐஎம்எப் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய நேரடி நெறிப்படுத்தலில் நிதிக்கையாளுகைகள் உருவாக்கப்பட வேண்டும்.

"வடக்கு, கிழக்கு இணைந்த, இரண்டையும் இணைப்பாக மேற்கொள்கின்ற இடைக்கால நிர்வாகத்தை வடக்கு, கிழக்கிற்கான பொருளாதார அபிவிருத்திக்காகவும், மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்காகவும் உருவாக்கப்படுகின்றபொழுது, இந்தியா பொறுப்பேற்க வேண்டும். இந்தியாவினுடைய பங்களிப்பில்லாமல் அதனை கையாள முடியாது. அது நடக்கக்கூடிய காரியமுமல்ல.

"அதேநேரம், பலம்வாய்ந்த நிதி அமைப்பு ஒன்றின் ஊடாக நிதிப்பொறுப்பு கையளிக்கப்பட்டு, அதன் ஊடாக வடக்கு கிழக்கில் தேங்கிப்புரையுற்ற பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், அதன் ஊடாக வரும் டொலரை இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றத்தை தரும் வகையிலே கொண்டெடுக்கக்கூடியதாக இருக்கும்" என்றார்.

போராட்டங்கள் ஊடாகத்தான்

சர்வதேச தீர்வு கிட்டும்

■ சண்முகம் தவசீலன்

வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது தான் சர்வதேசம் எங்களை திரும்பி பார்க்கின்ற அல்லது ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கின்ற நிலை ஏற்படும் என முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆரம்பித்த தொடர் போராட்டம், இன்று 30ஆம் திகதி 2,000 நாட்களை கடக்கின்றது.

இந்நிலையில், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். இந்த அழைப்புக்கு வலு சேர்க்கும் முகமாக, கரைதுறைப்பற்று தவிசாளர் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில், "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமைகள் உறவுகளின் போராட்டம், வடக்கு, கிழக்கு பகுதிகளில் 2,000 நாள்களை கடந்து சென்றுள்ளது.

"இது காலத்துக்கு காலம் வருகின்ற ஆட்சியாளர்கள் தங்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குவதுமாகவே காணப்படுகின்றது.

"ஆனால், உண்மையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படும் கஸ்டங்கள் எண்ணில் அடங்காதவை. ஒவ்வொரு நாளும் பல்வேறு பட்ட சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கி கடந்து செல்கின்றார்கள்.

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்திற்கு சரியான தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமல்ல சமூகம் சார்ந்த ஒவ்வொருவரின் கடமையாக காணப்படுகின்றது.

"காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் உயிர்கள் பிரிந்தாலும் இதற்குரிய தீர்வு கிடைப்பதாக தெளிவான பொறிமுறை இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனை ஒரு முடிவிற்கு கொண்டுவரவேண்டுமாக இருந்தால் சகல தரப்பினரும் அவர்களுடன் கைகோர்த்து இந்தப் போராட்டத்தை வலுச்சேர்க்க வேண்டும்" என்றார்.

வெளிநாடு செல்ல முற்பட்ட

17 பேர் கைது

■ எம்.றொஷாந்த்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பகுதியில் இருந்து வெளிநாடு செல்ல முற்பட்ட 17 பேர், நேற்று திங்கட்கிழமை (29) பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர், சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இருவர், கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் குழுவொன்று நடமாடுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் அவர்கள் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக வெளிநாடொன்று செல்ல முற்றபட்டதாக தெரியவந்துள்ளது.

அதனை அடுத்து அவர்களை, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். மாநகர சபைக்கு வழங்கிய

நிதியை மீள ஜப்பான் கடிதம்

வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்காக நன்கொடையாக வழங்கப்பட்ட நிதித் தொகையொன்றை மீள ஒப்படைக்குமாறு, யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் ஜப்பான் தூதரகம் கோரியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரலில் நான்கு கழிவு சேகரிப்பு மீள் சுழற்சி வாகனங்களை வழங்குவதற்காக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய ஒரு கோடியே 43 இலட்சத்து 29,446 ரூபாய் நிதி ஜப்பானினால் வழங்கப்பட்டது.

ஆனால், அது தொடர்பான வேலைத்திட்டங்கள் மூன்று வருடங்களாகியும் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தம்மால் முன்மொழியப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தாதன் காரணமாக, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை மீள ஒப்படைக்குமாறு, ஜப்பானிய தூதரகம் கடிதமொன்றை அனுப்பி, யாழ்ப்பாண மாநகர சபையிடம் கோரியுள்ளது.

வெளிநாட்டிலிருந்து கிடைத்த நிதியை உள்ளூராட்சி மன்றங்களால் நேரடியாக பயன்படுத்த முடியாது என்ற காரணத்தை குறிப்பிட்டு, ஜப்பான் வழங்கிய நிதியை பயன்படுத்துவதற்கு இலங்கை நிதியமைச்சு தடை விதித்ததாலேயே குறித்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக மாநகர சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் ஆண்டு பூர்த்தி விழா

நுவரெலியா மாவட்ட இசைக்கலைஞர்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தி விழா, ஒன்றியத்தின் தலைவர் ராஜ்போரா, செயலாளர் இராமன் கேதீஸ்வரன் தலைமையில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இசைத்துறையில் சாதனை படைத்த இசை கலைஞர்கள் மற்றும் சிற்பகலைஞர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியாளர்களுக்கு கௌரவமும், விருதுகளும் வழங்கப்பட்டன.

மலையக மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க

முன்னணி செயற்படும்

■ நீலமேகம் பிரசாந்த்

மலையக மக்களின் பிரச்சனைகளை இனங்கண்டு அதற்கான முழுமையான தீர்வுகளை வழங்குவதற்கு மலையக மக்கள் முன்னணி என்றும் தயாராக இருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் நிர்வாக குழு கூட்டம் தலவாக்கலை கட்சி காரியாலயத்தில் நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அதாவது மலையக மக்களின் பிரச்சனைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

வாழ்வாதார பிரச்சனைகளாக இருக்கட்டும் அதேபோல தொழிற்சங்க ரீதியிலான பிரச்சனைகளாக இருக்கட்டும் அவற்றை உடனடியாகத் தீர்க்க மலையக மக்கள் முன்னணியும் அதன் ஊழிர்களும் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் மலையகத்தில் பல இடங்களில் கட்சி காரியாலயங்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. நுவரெலியா மாவட்டம் உட்பட முழு மத்திய மாகாணத்திலும் அதேபோல ஊவா மாகாணம் முழுவதிலும் மக்களின் குறைகளை கேட்டு உடன் தீர்வு வழங்குவதற்கான காரியாலயங்களும் அதேபோல விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

எனவே மக்கள் எந்நேரமும் மலையக மக்கள் முன்னணியோடு இணைந்து தங்கள் பிரச்சனைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் .மக்களுக்கான கதவு எப்போதும் திறந்தே காணப்படுமென அவர் தெரிவித்தார்.

யட்டியாந்தோட்டையில் பட்டம் ஏற்றும் திருவிழா

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை பிரதேச செயலக அலுவலகத்தின் சிறுவர் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பட்டம் விடும் போட்டி இன்று (30) யட்டியாந்தோட்டை வின்சன்ட் பெரேரா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யட்டியாந்தோட்டை நகரை அண்மித்த பகுதிகளிலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டி காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெறும் என பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிரியங்கனி பெதங்கொட தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஏனைய பிரிவு மாணவர்களுக்கான பட்டம் விடும் போட்டி பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை நடைபெறும் என்றும் இதற்கான அனுமதிகள் அனைவருக்கும் இலவசம் என்றும் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் வழங்கி வைப்பு...

மஸ்கெலியா சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் 25 குழந்தைகளுக்கும் அப்கொட் பகுதியில் 25 குழந்தைகளுக்கும் போர்வைகள் உலர் உணவுப் பொருட்கள் பால்மா மற்றும் அப்கொட் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்குமான உலர் உணவுப் பொருட்களும் கொழும்பு 4 லயன்ஸ் கழகமும் டிக்கோயா ரோட்டறி கழகமும் இணைந்து வழங்கி வைத்தன.
(டி.ஷங்கீதன்)

பாடசாலை போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதேசத்தில் நிலவும் கடுமையான டீசல் தட்டுபாடு காரணமாக, குறித்த பிரதேசத்திலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் பாடசாலை வாகனங்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேபோல் ஹட்டனிலிருந்து குறுகிய மற்றும் நீண்டதூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களை நம்பியுள்ள பயணிகளும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தமக்கு உரிய முறையில் எரிபொருள் கிடைக்காமை காரணமாக தமது சேவைகளை மட்டுப்படுத்தியுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் பலர் தெரிவித்தனர்.

இரத்ததானம்

இராகலை நூருல் இஸ்லாம் ஜும்மா பள்ளி நிர்வாக சபை தலைவர் மொஹமட் ஷியாம் மற்றும் நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் இராகலையில் நேற்று (29) திங்கட்கிழமை நடைபெற்ற இரத்ததானம் வைபவத்தில் வலப்பனை பிரதேச செயலாளர் செல்வி நயானி தென்னகோன், நுவரெலியா வை.எம்.எம். ஏ அமைப்பின் இயக்குனர் ஜி. அப்துல் ரஹீம் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல்

■ சிவாணி ஸ்ரீ

புதிய அரசியலமைப்பு மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்பை குறைத்து நெருக்கடியை தீர்க்கும் அணுகுமுறை குறித்து, இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் (29) இரத்தினபுரி கேத்துமதி உல்லாச விடுதியில் நடைபெற்றது.

சமுதாயத்திற்காக தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்திற்கான கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான தேசபந்து கரு ஜயசூரிய

தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில், மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் சர்வமத குருமார்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆடி மகோற்சவத் திருவிழா

■ அ.புவியரசன்

ஹாலிஎல ஸ்ரீ வீரசக்தி பெருமான் ஆலயத்தின் ஆடி மகோற்சவத் திருவிழா இன்று 30ஆம் திகதி மு.ப. 10.35 தொடக்கம் 12.05 வரையுள்ள சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 5 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

31ஆம் திகதி புதன்கிழமை காலை 1008 சங்காபிஷேகப் பூஜையைத் தொடர்ந்து, ஹாலிஎல புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள அம்மன் ஆலயத்திலிருந்து பாற்குட பவனி , பறவை காவடி, என்பவை ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடைந்ததும், சுவாமி உள்வீதி வலம் வருதலும், மகேஸ்வரப் பூஜையும் நடைபெறும்.

செப்டம்பர் 1ஆம் திகதி விநாயகர், முருகன், மாரியம்மன் ஆகிய கடவுளர்களை ஒன்றிணைத்த முத்தேர் பவனி இடம்பெறும். 2ஆம் திகதி காலை பொற்சுன்னம் இடிக்கப்பட்டு ஹாலிஎல ஆற்றங்கரையில் தீர்தோற்சவம் இடம்பெறும். 30ஆம் திகதி வைரவர் பூஜையுடன் ஆடி உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

கண்டி வர்த்தகரை காணவில்லை

■ சேஹான் சேனவிரத்ன

பேராதனை உத்ஹித பூங்காவுக்கு முன்பாக வர்த்தகம் நிலையம் ஒன்றை நடத்திச் சென்ற 47 வயதான ஒருவரை இரண்டு நாட்களாக காணவில்லை என அவரது மனைவி பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

காணாமல் போன நபரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு கொலை வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையிலேயே இவர் காணாமல் போயிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹா கும்பாபிஷேகம்

அருள்மிகு குறிஞ்சிக்குமரன் கோயில் மஹா கும்பாபிஷேகம் செப்டெம்பர் 5ஆம் திகதி காலை 6.41 மணிமுதல் காலை 7.31 மணிவரையிலான சுபநேரத்தில் நடைபெறும்.

இரசாயனப் பொருள்களின் விலையேற்றத்தால்

பாரம்பரிய விவசாயத்தை கைவிடும் விவசாயிகள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

இரசாயன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களின் தரம் குறைவு மற்றும் விலையேற்றம் காரணமாக நுவரெலியா மரக்கறி உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மரக்கறிச் செய்கையை கைவிட வேண்டியுள்ளதாக நுவரெலியா சதாதன்ன பிரதேசத்தில் பாரம்பரியமாக மரக்கறிகளை பயிரிடும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

50 கிலோ கிராம் நிறையைக் கொண்ட இரசாயன உரம் ஒரு மூட்டை 25 ஆயிரம் ரூபாய்க்கு சந்தையில் வெவ்வேறு பெயர்களில் விற்கப்படுவதாகவும்,இ ரசாயன உரங்களின் தரம் குறைந்ததால் காய்கறி பயிர்களின் விளைச்சல் மிகவும் குறைவாக இருப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் கரட் விதைகளின் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளதாகவும், அந்த விதைகளை பயிரிடுவதில் நத்தையால் கடும் அச்சுறுத்தல் இருப்பதாகவும், நத்தைகளை அழிக்க சந்தையில் கிடைக்கும் இரசாயனங்களின் விலை மிக அதிகமாக உள்ளதென தெரிவித்த விவசாயிகள், இதனால் கரட் விளைச்சல் குறைந்து வருகிறது என்றனர்..

தாம் மரக்கறிச் செய்கையை

> மிகக் குறைந்த விலையில் அவற்றை சந்தைக்கு விடுவது உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும்

பாரம்பரியமாக வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்ற போதிலும், மரக்கறிச் செய்கையை தொடர்வதற்கு பல இடையூறுகள் இடையூறாக உள்ளதால் மரக்கறிச் செய்கையை கைவிடும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெலிமடை, பொரலந்த, பண்டாரவளை போன்ற பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் தமது உருளைக்கிழங்கு அறுவடையை சந்தைக்கு விடுவித்து வருவதாகவும், இவ்வாறான வேளையில் நாட்டில் எவ்வளவோ டொலர் நெருக்கடி ஏற்பட்டாலும் வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகக் குறைந்த விலையில் அவற்றை சந்தைக்கு விடுவது உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என இலங்கை ஒருங்கிணைந்த விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார்.

வேதனைகளை சாதனைகளாக மாற்றிய மாணவர்கள்

வெற்றிக் கனியை இன்று சுவைக்கின்றனர்

இம்முறை வெளிவந்த க.பொ.த.உயர்தர பரீட்சை நாட்டினுடைய எதிர்கால வளர்ச்சியின் ஆக்கப்பூர்வமான ஆரம்பமே என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பல இன்னல்களை கடந்து மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வேதனைகளை சாதனைகளாக மாற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இன்று வெற்றி என்னும் கனியை சுவைத்துக் கொண்டிருக்கின்றார்கள்

க.பொ.த.உயர்தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியாகவும் மலையகத்திலும் இம்முறை பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளை காணக்கூடியதாக உள்ளது.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் மலையக மாணவர்கள் கல்வியில் முன்னிலையில் திகழ்கின்றார்கள் இது வரவேற்கத்தக்க விடயமாகும்

> சித்தியடையாத மாணவர்களும் துவண்டு விடாது தோல்வியே வெற்றியின் ஆரம்பப்புள்ளி என்பதை நினைவில் நிறுத்தி செயற்படவேண்டும்

வளமான மலையகத்தின் ஆரம்பப்புள்ளி இதுவாகும்.

புள்ளி விபரங்களின் அடிப்படையில் 62.9 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை நாட்டினுடைய எதிர்கால வளர்ச்சியின் ஆக்கப்பூர்வமான ஆரம்பமாகும்.இதற்கு காரணமாக இருந்த அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கும் தன்னுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்

சித்தியடைந்த மாணவர்களை போன்று சித்தியடையாத மாணவர்களும் துவண்டு விடாது தோல்வியே வெற்றியின் ஆரம்பப்புள்ளி என்பதை நினைவில் நிறுத்தி செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

போசாக்குக் குறைபாட்டை போக்குவதற்கு வழிசமைக்கவேண்டும்

போகிற போக்கைப் பார்த்தால், "இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் நோய்நொடி இல்லாமல் வாழப்போகிறோம்" என நினைப்பவர்கள் ஏராளம். "அந்தக் காலத்தில் நாங்கள் சாப்பிட்ட சாப்பாட்டால் தான், நாங்கள் எல்லாம் தென்போடு இருக்கிறோம்" என்று உடலை முறுக்கிக்காட்டும் வயோதிபர்களும் இருக்கின்றனர்.

மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றில் முழுமையான திருப்தியைப் பெறாதவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். இருக்கும் வரையிலும் நிம்மதியாக இருந்துவிட்டுப் போவோமெனக் கூறுபவர்கள் பலரும் இருக்கின்றனர். ஏனெனில், நாட்டின் பொருளாதார நெருக்கடி, அந்தளவுக்கு தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

மூவேளையில் பல வேளைகளைப் பலரும் வெறுமையாகவே கழித்துவிடுகின்றர். காலை உணவின் முக்கியத்துவம் அறியாத பலரும், அதைத் தவிர்த்து விடுகின்றனர். இவை எதிர்கால சந்ததியினர் மீது கடுமையான தாக்கத்தைச் செலுத்தும். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பினால், சத்துணவை உண்பதை விடவும், குறைந்த விலையில் வயிற்றை நிரப்பிக் கொள்வதையே பலரும் செய்கின்றனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி, சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது. இந்நிலையில், ஐக்கிய நாடுகளின் சிறுவர்கள் நிதியம் (யுனிசெப்)பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லாரியா அட்ஜெய்யின் கூற்று பேரச்சத்தை ஏற்படுத்துகின்றது.

குழந்தைகளின் போசாக்குக் குறைபாட்டின் அடிப்படையில் இலங்கை உலகளாவிய ரீதியில் 6ஆவது இடத்திலும், தெற்காசியாவில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ளும் நாடுகளில் 2ஆவது இடத்திலும் உள்ளது.

கொரோனா காலத்தில், வைரஸ் தொற்றிக்கொள்ளக் கூடாதென, சுகாதார வழிமுறைகளைக் கடுமையாக கடைப்பிடித்தமை மட்டுமன்றி, போசாக்கான உணவையும் உட்கொண்டனர். எனினும், நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது. குறைந்த விலையில் கிடைக்கும் உணவுகள் மீதான நாட்டமே மக்களிடத்தில் அதிகரித்துள்ளது.

உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமையால், பல குடும்பங்கள் வழமையாக உட்கொள்ளும் உணவைத் தவிர்த்து வருவதாகவும் குழந்தைகள் பசியுடன் நித்திரைக்கு செல்வதாகவும் ஜோர்ஜ் லாரியா அட்ஜெய் தெரிவித்துள்ளார். ஆகையால், சகலவற்றையும் கொள்வனவு செய்வதைக் கைவிட்டு, வளர்க்கக்கூடிய மரக்கறிகளை வீட்டுத் தோட்டங்களில் வளர்த்து, குழந்தைகளுக்கு உணவாகக் கொடுக்க ஒவ்வொரு பெற்றோரும் முன்வரவேண்டும்.

பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்களைப் பொறுத்தவரையில், காலை உணவு கட்டாயமானது. வெறும் வயிற்றுடன் செல்வோர், வகுப்பறையில் சோர்வாகவே இருப்பர். அதில், அவர்களின் எதிர்காலத்தை முழுமையாகப் பாதித்துவிடும். போசாக்கு இன்மையானது எதிர்காலத்தை சூனியமாக்கிவிடும்.

எதிர்கால சந்ததியினரை கவனத்தில் கொண்டு போசாக்கான உணவு வகைகளில் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் அதுவே பேருதவியாக இருக்கும்.

நாட்டின் தற்போதை நிலைமையானது வழமைக்குத் திரும்புவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். செலவுகளோ வருமானத்தை விஞ்சி நிற்கிறது. எனினும், எதிர்கால சந்ததியினரைக் கவனத்தில் கொண்டாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென நாமும் வலியுறுத்துகிறோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

சொர்க்கத்துக்குச் செல்ல ஆசைப்படுபவர்கள் அநேகர். இவர்கள் என்ன சொர்க்கத்தைப் பார்த்தார்களா? இல்லையே!

புண்ணியம் செய்தால் சொர்க்கம் கிடைக்கும் என்கிறார்கள். ஆனால், நாங்கள் வாழும் வையகமே சொர்க்கம்தான். இதை நாம் பார்த்தபடி இஅருந்தும் கூட, சொர்க்கம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். மிகவும் அழகாகவே உலகம் படைக்கப்பட்டுள்ளது.

உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் விதம்விதமான அழகுண்டு. ஆனால், நாங்களோ பிறந்த மண்ணின் அழகை இரசிப்பது கிடையாது. அயல்நாட்டின் பெருமை பற்றியே பேசுகின்றோம். நல்லதைப் பற்றி புகழ்ந்து பேசுவதில் தவறேதும் இல்லை.

எங்கள் நாட்டின் பிரச்சினைகள் பலவிதம். அது தீர்வதாக இல்லை. உலகம் முழுவதும் அமைதியைக் குழப்பும் நாடுகள் ஏராளம் இருக்கின்றன. எனினும் நாம் வாழும் பூமியை வளம்படுத்த, இயற்கையுடன் இணைந்து செயற்படுவோம். வானுலகு எனப்படும் கற்பனை உலகை விஞ்சி, எங்கள் பிரதேசமும் முழு அழகாகிவிடும்.

சுற்றாடலைப் பேணினாலே போதும். உங்கள் வல்லமைகளை உணர்க. தூய்மையில்தான் அழகு பரிணமிக்கின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கடிதங்கள்

தடுத்து நிறுத்தவும்

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்டமுட்கொம்பன் கிராமத்தில அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி விற்பனைகள் என்பவற்றால் பெண்கள், சிறுவர்கள் பாதிக்கப்படுவதுடன் தாங்கள் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொள்வதாகவும் கிராம மட்ட அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இளம் வயதினர் இவற்றிற்கு அடிமையாகி வருவதாகவும் தங்களுடைய இளம் சமூகத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச பிரதேச பொது அமைப்புகள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

இவ்வாறு சட்ட விரோத மது,போதைப் பொருள் பாவனைகளுக்கும் இளவயதினர் அடிமையாகி வருவதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் கிராமமட்ட அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன அதாவது குடும்ப வன்முறைகள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் என்பன அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பெண்கள் வலையமைப்பு உடனான சந்திப்பின் போது பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யது பாஸ்கரன்

முஸ்லிம் அரசியல்:

கோட்டையை இழக்கப்போகும் ராஜாக்கள்

மொஹமட் பாதுஷா

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் கதைகள் புஷ்வாணமாகிக் கொண்டிருக்கின்ற சூழலில், அப்படியென்றால் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என்ற குரல்களும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

தற்போதுள்ள பாராளுமன்றத்திற்கு இரண்டரை வருட ஆட்சிக்காலம் முடிவடைந்த பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டால் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்களும் அடுத்த வருடம் நடுப்பகுதியில் உள்ளன.

மாகாண சபை ஆட்சிகளின் ஆயுட்காலம் முடிவடைந்து பல வருடங்களாகின்றன. ஆயினும், மாகாணத்தை ஆட்சி செய்வதற்கான அரசியல் அதிகார சபையை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதனால், வெறுமனே ஆளுநர்களினால் ஆட்டுவிக்கப்படும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பாக இது மாறியிருக்கின்றது.

இதேவேளை நாட்டிலுள்ள எல்லா உள்ளூராட்சி சபைகளும் தமது நான்கு வருட ஆட்சிக் காலத்தின் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றுக்கான தேர்தலையும் நடத்த வேண்டியுள்ளது.

மாகாண சபை முறைமையை ஒரு வெள்ளை யானை என்றுதான் பெருந்தேசிய அரசியல்வாதிகள் கூறி வருகின்றார்கள். இச் சபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்றாலும் கூட, மாகாண சபைகள் மத்திய அரசிற்கு தலையிடியை கூட்டி விடுகின்ற கட்டமைப்பாகவே இருந்து வந்திருக்கின்றன.

இப்போது மாகாண சபை தேர்தலை நடத்த முற்பட்டால் குறிப்பாக வடக்கு , கிழக்கு மாகாணங்கள் பற்றி தமிழர்கள் என்ன கோரிக்கையை முன்வைப்பார்கள்? அதில் இந்தியா என்ன வகிபாகத்தை எடுக்கும்? என்ற உள்ளச்சம் ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், தேர்தல் சட்டத்தை திருத்த வேண்டும் அல்லது எல்லை நிர்ணயம் செய்தால் நல்லது போன்ற கற்பிதங்களைக் கூறி மாகாண சபை தேர்தல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆனால், உள்ளூராட்சி சபை தேர்தல்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் ஆயுட்காலத்தை மேலும் சுமார் ஒரு வருடத்திற்கு நீடிக்க சட்ட ஏற்பாடுகள் உள்ளன. ஆயினும் மாகாண சபை தேர்தலைப் போல ஆண்டாண்டுகாலமாக இழுத்தடிக்க முடியாது.

ஆகவே, மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற குரல்கள் சற்று ஓய்ந்திருக்கின்ற நிலையில், இப்போது உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் பற்றி பேசப்படுகின்றது. அடுத்த வருடம் பெப்ரவரியில் அல்லது அதற்குக் கிட்டிய திகதியொன்றில் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சூழ்நிலையில், ஏதாவது தேர்தல் ஒன்று இடம்பெற்றால் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மற்றும் தனியொரு அரசியல்வாதியில் தங்கியிருக்கும் அணிகளின் வெற்றி, தோல்விகள் எப்படி அமையும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

2019 இல் இருந்து இன்று வரை, இலங்கையில் எந்தவொரு முறைமையும் சரிவர இயங்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொரோனா அலைகள், பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பங்கள் என காலங்கள் எந்தப் பயனுமற்று கழிந்து கொண்டிருக்கின்றன.

சாதாரணமான காலங்களிலேயே ஒரு மந்தமான, சுறுசுறுப்பற்ற அரசியலைச் செய்து பழக்கப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள், கடந்த மூன்று நான்கு வருடங்களாக இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் .

மஹிந்தவையா, சஜித்தையா, ரணிலையா ஆதரிப்பது என்ற குழப்பத்திலேயே சிலரது காலம் கழிந்து விட்டது. சில முஸ்லிம் தலைவர்களுக்கு கட்சியில் உள்ளவர்களிடையே பஞ்சாயத்து நடத்துவதே வேலையாகி இருக்கின்றது. சிலர் அமைச்சுப் பதவிகள், வெகுமதிகளுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

இன்னும் பல முஸ்லிம் அரசியல்வாதிகள் இதற்குப் பிறகு நமக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்பதை தாமாகவே உணர்ந்து விட்டார்கள். எனவே எப்பாடுபட்டாவது அதை தக்க வைப்பது, அல்லது கிடைப்பதை சுருட்டிக் கொண்டு ஒதுங்கிக் கொள்வது என்ற இரண்டில் ஒரு தெரிவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை காண முடிகின்றது.

கடந்த தேர்தல்களில் முஸ்லிம் கட்சிகளின் வாக்கு வங்கிகள் பொதுவாக சரிவடைந்திருந்தன. 99 சதவீதமான முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கான வாக்குககளும் இறங்குமுகமாக இருந்தது. இதற்கான காரண காரியங்கள் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் தெரியும்,

மக்களை மறந்த அரசியலைச் செய்தமையும் முஸ்லிம் சமூகத்தை தொடர்ச்சியாக தவணை முறையில் பேய்க்காட்டி வந்தமையுமே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

பிரதான முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி அவர்களுக்கு கீழுள்ள இரண்டாம் - மூன்றாம் நிலை அரசியல்வாதிகள், எடுபிடிகள், இணைப்பாளர்கள், அமைப்பாளர்கள், பேஸ்புக் போராளிகளும் இந்த நிலைமை ஏற்படக் காரணமாகியுள்ளார்கள்.

இது யாருக்கும் தெரியாத பரம ரகசியமல்ல. இந்த யதார்த்தத்தை, பின்புலத்தைக் கூட புரிந்து கொண்டு, தம்மை சுதாகரித்துக் கொண்டு செயற்படக் கூட ஆற்றல் அற்றவர்கள், அரசியல் தலைவர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு அடிப்படைத் தகுதி அற்றவர்களாவர்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களில் தமது கோட்டைகளை மறுசீரமைத்து இராஜியங்களை தக்க வைத்துக் கொள்வதற்கான பணிகளை அவர்கள் செய்திருக்க வேண்டும். தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வது ஒருபுறமிருக்க முஸ்லிம் சமூகத்திற்கான அரசியலை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவர்களிடம் இருக்கின்றது.

இதில் முதலாவது விடயமானது இரண்டாவது விடயத்திலேயே தங்கியிருக்கின்றது. அதாவது மக்களுக்கான அரசியலைச் செய்வதன் ஊடாகவே நீண்டகாலம் தமது கோட்டைகளில் அவர்களால் கொடிநாட்ட முடியும்.

இந்த விவகாரத்தில் றவூப் ஹக்கீம். றிசாட் பதியுதீன், அதாவுல்லா என அனைத்து முஸ்லிம் கட்சித் தலைவர்கள் மற்றும் முஸ்லிம் எம்.பி.க்கள் 'பெயில்' ஆகியுள்ளனர் என்றுதான் சொல்ல வேண்டும். பெரும்பான்மை கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் எம்.பிக்களின் நிலையும் இதுதான்.

தேசிய அரசியலில் கோட்டபாய உள்ளிட்ட ராஜபக்ஷர்கள் மக்கள் மனங்களில் இருந்து தூரமானதை விட, முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லம் சமூகத்தின் மனங்களில் இருந்து அதிக தூரம் சென்று விட்டனர்.

எனவே அவர்கள் அடைந்த பெயிலை விட இவர்கள் மிக மோசமாக பெயில் அடைந்துள்ளனர்.

அரசியல் என்பது எல்லாக் காலத்திலும், அனைத்து களநிலைமைகளிலும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டிய ஒரு தொழிலாகும். இதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் மறந்து செயற்படுவது ஒன்றும் புதிதல்ல.

தேர்தல் காலங்களில் உயிரோட்டமாக இருந்து விட்டு, அதற்குப் பின்னரான காலங்களில் அதிகாரக் கதிரைகளில் அப்படியே ஓர் அரசியல் ஜடத்தைப் போல இருந்து கொண்டு காலத்தைக் கடத்தி விடுவது பழகிப்போன சங்கதிதான்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலும், கொரோனா பொருளாதார நெருக்கடிகள் நமது வழக்கமான இயங்குநிலையை குறிப்பாக முஸ்லிம்களின் செயற்பாட்டை பாதித்தது.

ஆனால், மறுபுறுத்தில் இந்த சந்தர்ப்பங்களில் சமூகத்திற்கான அரசியலைச் செய்வதற்கான பல வாய்ப்புக்கள் கிடைத்தன. அதிலும் குறிப்பாக கொவிட் வைரஸ் பரவிய காலத்திலும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடிச் சூழலிலும் மக்களுக்கு நெருக்கமாகச் சென்று சேவை செய்வதற்கு எத்தனையோ வாய்ப்புக்கள் கிடைத்தன.

ஆனால், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனச் சொல்லப்படுவோர் பெரும்பாலும், கொழும்பில் முடங்கிக் கிடந்தமையாலும், காலை வேளைகளில் நேரம்பிந்தி கண்விழித்தமையாலும் மக்களின் தொலைபேசி அழைப்புக்களை தட்டிக் கழித்தமையாலும், அந்த வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர்.

இதனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் இருந்தால்தான் இதனைச் செய்து முடிக்க முடியும் என்ற நிலைமை மாறியிருக்கின்றது. எல்லாம் நடக்கின்றபடியே நடந்து கொண்டு போகும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு, தமது கல்லாப் பெட்டிகளில் மட்டும் அவர்கள் கவனமாக இருப்பார்கள் என்றால், அப்படியொரு அரசியல் முறைமை நமக்குத் தேவைதானா?! என்று முஸ்லிம் சமூகம் சிந்திக்க தொடங்கியுள்ளதாக தெரிகின்றது.

இது இப்படியே தொடர்ந்தால், முஸ்லிம் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளைச் சார்ந்தியங்கும் அரசியல் அணிகள் அடுத்தடுத்த தேர்தல்களில் தமது கோட்டைகளை இழக்கும். உள்ளூராட்சி மன்ற தேர்தல் அதற்கான முதலாவது அக்கினிப் பரீட்சையாக அமையும் எனலாம்

இனிமேல் ராஜபக்ஷர்கள் குறிப்பாக கோட்டபாய அரசியலில் ஈடுபட முடியாது என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்களை விட அதிகமாக, மக்கள் சார்பு அரசியல் தோல்வியுற்றது முஸ்லிம் அரசியல்வாதிகள்தான் என்பதை மறக்க முடியாது.

இதனை மக்கள் சரியாக மனதில் வைத்து வாக்களித்தால் கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க பெற்ற தேர்தல் தோல்விகளை விட பலமான தோல்விகளை முஸ்லிம் அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலில் சந்திக்க நேரிடும்.

முஸ்லிம் அரசியலின் மகாராஜாக்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற பலர் தமது கோட்டைகளை, மட்டுமல்ல கோவணத்தையும் இழக்க வேண்டி ஏற்படலாம்.

சம்பளத்தை உயர்த்திய சமந்தா

நடிகை சமந்தா தற்போது யசோதா, சாகுந்தலம்' ஆகிய படங்களில் நடித்து முடித்துள்ளார். அடுத்தப்படியாக ஹிந்தியில் வெப்சீரிஸ் ஒன்றில் நடிக்கிறார். ராஜ் - டீகே இயக்குகின்றனர். வருண் தவான் முதன்மை வேடத்தில் நடிக்கிறார்.

இதுநாள் வரை ரூ.2 முதல் 2.50 கோடி சம்பளம் வாங்கி வந்த சமந்தா தற்போது 1 கோடி உயர்த்தி ரூ.3.50 கோடி சம்பளம் கேட்கிறாராம். புஷ்பா பாடலுக்கு பின் கிடைத்த வரவேற்பாலும் தற்போது ஹிந்தியிலும் நடிக்க தொடங்கி உள்ளதாலும் தனது சம்பளத்தை உயர்த்தி உள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது ஹிந்தியில் நடிப்பதால் தென்னிந்திய படங்கள் எதிலும் கமிட்டாகவில்லை சமந்தா. இனி தான் நடிக்க போகும் படத்துக்கு ரூ.3.5 கோடி தான் சம்பளம் நிர்ணயித்துள்ளாராம்.

சென்னை

புரட்சி பயணம்

தமிழகம் முழுவதும் விரைவில் புரட்சி பயணம் மேற்கொள்ள உள்ளதாகவும் சசிகலா, டிடிவி தினகரனை நேரில் சந்திக்க உள்ளதாகவும் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

பசுமை வழிச்சாலையில் உள்ள ஓ.பன்னீர்செல்வம் இல்லத்தில் உசிலம்பட்டி தொகுதி எம்.எல்.ஏ ஐயப்பன் அவரை நேரில் சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார்.

எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக இருந்த உசிலம்பட்டி எம்எல்ஏ ஐயப்பன் ஓ.பன்னீர்செல்வத்திற்கு தற்போது ஆதரவு தெரிவித்துள்ளார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அவர், தனக்கு ஏற்பட்ட அவமானங்களை தாங்கி கொண்டு அண்ணா திராவிட முன்னேற்ற

கழகம் (அ.தி.மு.க) ஒன்றாக இருக்க வேண்டும் என ஓ.பி.எஸ் கூறினார்.

எனவே, அவருக்கு ராமருக்கு பாலம் கட்ட அணில் உதவியது போல உறுதுணையாக இருப்பேன். என்னைப்போன்று மற்ற எம்.எல்.ஏக்களும் ஒபிஎஸ்-க்கு ஆதரவு அளிப்பார்கள் என்னைப்போன்று மற்ற எம்.எல்.ஏ-களும் ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறேன் என்றும் எம்எல்ஏ ஐயப்பன் தெரிவித்தார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க, ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே தொண்டர்களின் நிலைப்பாடு. அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என ஏற்கெனவே சொல்லியுள்ளேன். பொதுக்குழு என்ற பெயரில் இபிஎஸ் தரப்பினர் நாடகம் நடத்தியுள்ளனர். எங்களுக்கு தொண்டர்களின் ஆதரவும், தமிழக மக்களின் ஆதரவும் முழுமையாக உள்ளது என்றார்.

கோவை

ஐஸ்கிரீம்க்குப் பதிலாக ஆணுறை பக்கெட்டுகள்

வாடிக்கையாளர் ஒருவர் ஐஸ்கிரீம், சிப்ஸ் போன்றவற்றை முன்பதிவு செய்த நிலையில் அவருக்கு ஆணுறை பக்கெட்டுகள் அனுப்பபட்டுள்ளன. இது தொடர்பாக வாடிக்கையாளரிடம் கோவையில் உள்ள நிறுவனம் மன்னிப்பு கேட்டுள்ளது.

கோவையைச் வாடிக்கையாளர் குழந்தைகளுக்காக ஐஸ்கிரீம் மற்றும் சிப்ஸ் ஆகியவற்றவை முன்பதிவு செய்தார். இந்நிலையில், டெலிவரி இளைஞன் மூலம் வீட்டிற்கு கொண்டுவந்து பொதி கொடுக்கப்பட்டுள்ளது. பொதியை திறந்து பார்த்த போது வாடிக்கையாளருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதில் சிப்ஸ், ஐஸ்கிரீமிற்கு பதிலாக இரண்டு ஆணுறை பாக்கெட்டுகள் அனுப்பப்பட்டிருந்தன. இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் அந்த நிறுவனத்தை டேக் செய்து பதிவிட்டார்.

இதனையடுத்து தவறு நடந்ததை உணர்ந்த அந்த நிறுவனம் மன்னிப்பு கேட்டது. மேலும் வாடிக்கையாளர் செலுத்திய தொகையினை உடனடியாக அவரது கணக்குக்கு திருப்பி அனுப்பியதுடன் , ஆணுறை பக்கெட்டுகளையும் திரும்ப பெற்றுக்கொண்டது.

ஸ்ரீநகர்

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து வழக்கு;

அமர்வை அமைக்காமல் தலைமை நீதிபதி ஓய்வு

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியாற்றி வந்த என்.வி. ரமணா கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஓய்வு பெற்றார். உச்ச நீதிமன்றத்தின் 49-வது தலைமை நீதிபதியாக கடந்த சனிக்கிழமை யு.யு. லலித் பதவியேற்றுக்கொண்டார்.

இதனிடையே, ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்த்து கடந்த 2019 ஓகஸ்ட் 5-ம் திகதி மத்திய அரசால் ரத்து செய்யப்பட்டது. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்டு ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது.

ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்த்து ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டது. ஆனால், இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இதுவரை விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை.

100 நாள் கொண்டாட்டம்

தமிழில் ஈரம், மிருகம், யாகவராயினும் நாகாக்க உள்பட பல படங்களில் நாயகனாக நடித்தவர் ஆதி. அதே போல் ஜி.வி .பிரகாஷ் நடித்த டார்லிங் படத்தில் தமிழுக்கு வந்தவர் நிக்கி கல்ராணி.

ஆதியும், நிக்கி கல்ராணியும் யாகவராயினும் நாகாக்க மற்றும் மரகத நாணயம் போன்ற படங்களில் இணைந்து நடித்துள்ளார்கள். அப்போது அவர்களுக்கிடையே காதல் உருவாகி கடந்த மே மாதம் 18ஆம் திகதி சென்னையில் திருமணம் செய்து கொண்டார்கள்.

இந்த நிலையில் தங்களுக்கு திருமணமாகி 100 நாள் ஆகிவிட்டதை அடுத்து அதை கொண்டாடுவதற்காக பிரான்சில் உள்ள பாரிஸ் நகருக்கு ஆதியும், நிக்கி கல்ராணியும் சென்றுள்ளார்கள்.

கோடியில் புரளும் வில்லன்



ஷாருக்கான் நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவாகி வரும் 'ஜவான்' படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்க இருக்கும் நிலையில் மிகப் பெரிய தொகையை சம்பளமாக பெற்று உள்ளதாக கூறப்படுகிறது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'பேட்ட' தளபதி விஜய் நடித்த 'மாஸ்டர்' மற்றும் உலக நாயகன் கமல்ஹாசன் நடித்த 'விக்ரம்' உள்பட ஒருசில படங்களில் வில்லனாக விஜய் சேதுபதி மிரட்டி வருகிறார். மேலும் அவர் ஹீரோவாக நடித்த படங்களைவிட வில்லனாக நடித்த படங்கள் மிகப்பெரிய வெற்றி பெற்று வருகிறது. இந்த நிலையில் ஹீரோவாக நடிப்பதை விட வில்லனாக நடிப்பதற்கு விஜய் சேதுபதி அதிக சம்பளம் வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

அந்த வகையில் ஷாருக்கான், தீபிகா படுகோனே, நயன்தாரா உள்ளிட்ட பலரது நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவாகி வரும் 'ஜவான்' படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்க உள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டது.

சிம்புவுக்கு விரைவில் டும்.. டும்.. டும்..

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக வலம் வருபவர் சிம்பு. டி ராஜேந்தர் மகனான இவர் குழந்தை நட்சத்திரமாக திரையுலகில் அறிமுகமாகி பல்வேறு படங்களில் நடித்த பிறகு ஹீரோவாக நடிக்க தொடங்கி பல வெற்றி படங்களை கொடுத்து வருகிறார். சர்ச்சைக்குரிய நடிகராக வலம் வரும் இவர் நீண்ட இடைவெளிக்கு பிறகு மாநாடு என்ற படத்தின் மூலம் மீண்டும் தனது வெற்றியை பதித்தார். இவரது நடிப்பில் அடுத்ததாக விந்து தணிந்தது காடு, 10 தல உள்ளிட்ட திரைப்படங்கள் வெளியாக உள்ளன.

பாலி

காதலித்த குற்றத்துக்கு ஆயுள் தண்டனை

தனது நண்பரின் திருமணத்துக்கு நாளிதழ் வடிவில் பிளக்ஸ் அமைத்த சம்பவம் திண்டுக்கல், பழனியை அடுத்துள்ள கோதைமங்கலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

கோதைமங்கலத்தை சேர்ந்த கவுதம் என்பவர் சென்னையை சேர்ந்த வினிதா என்பவரை கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்தார். பின்னர் பெற்றோர் சம்மதத்துடன் இன்று திருமணம் நடைபெற்றது.

இதனை குறிப்பிடும் வகையில்

தலைப்பு செய்தி

விவிதாவின் மனதை திருடிய குற்றத்திற்காக

ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது...

திருமண சட்டப்படி

ஆகஸ்ட் (28)

கோதைமங்கலத்தை சேர்ந்த கௌதம் என்பவர் சென்னையை சேர்ந்த வினிதாவை கடந்த 4 ஆண்டுகளாக காதலித்த குற்றத்திற்காக 28.08.2022 அன்று பெற்றோர்களால் திருமணம் (ஆயுள் தண்டனை)

காதலித்த குற்றத்துக்காக பெற்றோர்களால் ஆயுள் தண்டனை என்ற திருமணம் செய்து வைக்கப்படுகிறது என்ற வாசகம் இடம் பெற்றிருந்தது.

மேலும் திருமணம் ஆகாமல் காத்திருக்கும் நண்பர்களின் புகைப்படங்கள், சுயவிபர கோவை விவரம் வெளியிடப்பட்டு மணமகள் இருந்தால் தங்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

பழனி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த இந்த வினோத போஸ்டர் பொதுமக்களை வெகுவாக கவர்ந்தது.

வந்தவாசி

மழைநீரை மட்டும் பருகும் குடும்பம்

வந்தவாசி அடுத்த கீழ்சீசமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் கோதையான்(76). இவரது மனைவி ராணியம்மாள்(72). இவர்களுக்கு 2 ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் அதே கிராமத்தில் உள்ள தங்களது விவசாய நிலத்தில் கோதையான்-ராணியம்மாள் தம்பதியினர் வீடு கட்டி குடும்பத்துடன் அங்கு வசிக்க சென்றனர். அப்போதிலிருந்தே இவர்கள் குடிக்கவும், சமையல் செய்யவும் மழைநீரையே பயன்படுத்தி வருகின்றனராம்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:- நாங்கள் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்தே கிணற்று நீரையோ, ஆழ்துளைக் குழாய் நீரையோ உபயோகித்ததே இல்லை. மழைநீரை மட்டுமே சேமித்து உபயோகிக்க தொடங்கினோம் என்றனர்.

இந்தியா

கோதுமையை இறக்குமதி செய்யும்

தேவை இல்லை

நாட்டில் கோதுமை இறக்குமதி செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கான கோதுமை இருப்பு உள்ளது என்றும், பொது விநியோகத்திற்கு தேவையான கோதுமையை இந்திய உணவுக் கழகம் இருப்பு வைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நாட்டில் கோதுமை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் வெளிநாடுகளில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தன. இதுகுறித்து உணவு மற்றும் பொது விநியோகத்துறை சார்பில், ஞாயிற்றுக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டபோது, இறக்குமதிக்கான தேவை எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஓயாத அஜித்

அஜித் நடித்து வரும் அவரது 61ஆவது படத்தின் படப்பிடிப்புகள் முடிந்த நிலையில் இமயமலையில் பைக் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு சென்னையில் இருந்து விமானத்தில் இமாச்சல பிரதேசத்தில் உள்ள லடாக்குக்கு சென்ற அஜித், அங்கு தனது நண்பர்களுடன் இணைந்து இமயமலை சாலையில் பைக் பயணத்தை மேற்கொண்டுள்ளார். 4 நாட்கள் வரை அவர் இமயமலையை சுற்றி வருகிறார்.

ஆசியக் கிண்ணம்:

பாகிஸ்தானை வென்ற இந்தியா

ஆசியக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பாகிஸ்தான் உடனான குழு ஏ போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். பாகிஸ்தான் சார்பாக இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளில் வேகப்பந்துவீச்சாளர் நசீம் ஷா அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே அணித்தலைவர் பாபர் அஸாமை புவ்னேஷ்வர் குமாரிடம் இழந்ததுடன், பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் பக்கர் ஸமனை ஆவேஷ் கானிடம் இழந்தது. குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் ஹர்டிக் பாண்டியாவிடம் 28 (22) ஓட்டங்களுடன் இஃப்திஹார் அஹ்மட்டை இழந்த பாகிஸ்தான், 43 (42) ஓட்டங்களுடன் மொஹமட் றிஸ்வான், குஷ்டில் ஷாவை அடுத்தடுத்து பாண்டியாவிடம் இழந்தது.

சிறிது நேரத்தில் குமாரிடம் ஆசிஃப் அலி வீழ்ந்ததுடம், தொடர்ந்து அர்ஷ்டீப் சிங்கிடம் மொஹமட் நவாஸ் வீழ்ந்திருந்தார். பின்னர் குமாரிடம் ஷடாப் கான், நசீம் ஷா ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததுடன், ஹரிஸ் றாஃப் ஆட்டமிழக்காமல் 13 (07) ஓட்டங்களைப் பெற்றதுடன், சிங்கிடம் இறுதி விக்கெட்டாக வீழ்ந்த ஷஹ்னவாஸ் டஹானியின் 16 (06) ஓட்டங்களுடன் 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றது.

பதிலுக்கு 148 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா முதலாவது ஓவரிலேயே ஷாவிடம் லோகேஷ் ராகுலை இழந்தது. குறிப்பிட்ட நேரத்தில் ஷர்மா, 35 (34) ஓட்டங்களைப் பெற்ற விராட் கோலியை அடுத்தடுத்து மொஹமட் நவாஸிடம் இழந்தது. பின்னர் சூரியகுமார் யாதவ்வும் நசீம் ஷாவிடம் வீழ்ந்திருந்தார்.

இந்நிலையில், இரவீந்திர ஜடேஜாவின் 35 (29), பாண்டியாவின் ஆட்டமிழக்காத 33 (17) ஓட்டங்களுடன் 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இந்தியாவடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பாண்டியா தெரிவானார்.

நெஸ்டோமல்ட் சைக்கிள் சவால்:

வென்ற டெஷான் கவிந்த

நெஸ்டோமல்ட் சைக்கிள் சவாலானது நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் ஆண்களுக்கான கனிஷ்ட 19 வயதுட்குட்பட்டோருக்கான போட்டியில் பண் பீ சைக்கிள் கழகத்தின் டெஷான் கவிந்த வென்றார்.

இரண்டாமிடத்தை கதிரன ஸ்பீட் சைக்கிள் கழகத்தின் சச்சின் உமேஷ் பெற்றதோடு, பொரலஸ்கமுவ சைக்கிள் கழகத்தின் ஜாவிந்த டில்ஷான் மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார்.

நாடு முழுவதிமிருந்து இப்போட்டியில் 400க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். இரண்டாவது ஆண்டாக இம்முறை நடைபெற்றிருந்தது.

பிரெஞ்சு லீக் 1 தொடர்:

சமநிலையில் பரிஸ் ஸா ஜெர்மைன் – மொனாக்கோ போட்டி

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், மொனாக்கோவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

மொனாக்கோ சார்பாகப் பெறப்பட்ட கோலை கெவின் வொலான்ட் பெற்றதோடு, பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை நெய்மர் பெற்றிருந்தார்.

ஜயா பார்ம் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர்:

சம்பியனானது விம்பிள்டன்

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த ஜயா பார்ம் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் விம்பிள்டன் சம்பியனானது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நியூ ஸ்டார்ஸை வென்றே விம்பிள்டன் சம்பியனானது.

விம்பிள்டன் சார்பாக, எம்.எம். நதீம், எம். ஜே.எம். சிசான், எம்.எச். ஹிமாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, நியூ ஸ்டார்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை அஹ்ஸாப் அஹமது பெற்றிருந்தார்.

சம்பியனான விம்பிள்டனுக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும், இரண்டாமிடத்தைப் பெற்ற நியூ ஸ்டார்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 30,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

பிரான்ஸ்

கழிவுநீரை கடலில் கொட்டுகிறது பிரித்தானியா

பிரான்ஸ் குற்றச்சாட்டு



பிரான்ஸ் அரசு, இரண்டு நாடுகளுக்குமான பகிர்ந்து கொள்ளப்பட்ட கடல் நீலில் கழிவு நீரைச் சேர்ப்பதாகப் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திடம் புகார் அளித்துள்ளது.

பிரித்தானியா கடல் நீரில் கழிவு நீரை கொட்டுவது பிரெக்ஸிட்டிற்குப் பின் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதோடு இதனால் சுற்றுச்சூழலின் தரம் வெகுவாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது பிரான்ஸ் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை எதிர்த்து நடவடிக்கை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதன்படி அண்மையில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐரோப்பிய ஒன்றிய சுற்றுச்சூழல் ஆணையரான Virginijus Sinkevicius-க்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில் பிரிட்டன் கடலில் கழிவு நீரை சேர்ப்பது உயிரினங்களுக்கு அதிக தீங்கை ஏற்படுத்தும். எனவே, அதனை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

லிபியா

லிபியாவில் வெடித்த வன்முறை

லிபியாவில் போராளிகள் அமைப்பிற்கும் அரசாங்க படையினருக்கிடையே இடம்பெற்ற மோதலில் 20 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் திரிபோலி நகரத்தை தளமாக வைத்து ஐ.நா சபை அங்கீகரித்த அரசப்படையினர் மீது கடந்த 27 ஆம் திகதி ஆயுதமேந்திய போராளிகள் மற்றும் பிரதமரின் ஃபாத்தி பாஷாகா படைகள், துப்பாக்கிசூடு தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இத் தாக்குதலில் 23 நபர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் 87 பேர் படு காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சுகாதார அதிகாரிகள் வன்முறை நடந்த பகுதியிலிருந்து மக்களை வெளியேற்ற மற்றும் காயம் ஏற்பட்டவர்களுக்கு உதவி செய்ய பாதுகாப்பான பாதையை அளித்து போரை நிறுத்துங்கள் என வலியுறுத்தி வருகின்றனர்.

பிரித்தானியா

தனது இறுதிச்சடங்கில் பேசிய பெண்

பிரித்தானியாவில் இறந்த பெண்ணொருவர் தனது இறுதி சடங்கின் போது ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்னும் செயற்கை நுண்ணறிவு மூலமாக பேசிய சம்பவம் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த 87 வயதுடைய மரினா ஸ்மித் என்ற மூதாட்டி கடந்த ஜூன் மாதத்தில் வயது முதிர்வால் காலமானார். நிலையில் அவரின் மகன் ஸ்டீபன் ஸ்மித் தொழில்நுட்பத்தின் மூலமாக தன் தாயின் இறுதிச்சடங்கில் அவரின் வாழ்க்கை குறித்த கேள்விக்கு அவரே பதிலளித்ததை காண்பித்துள்ளார்.

அதாவது ஒரு நபர் உயிரோடு இருக்கும் போது அவரிடம் சில கேள்விகளைக் கேட்டு, அதற்கு அவர் கூறும் பதிலை பதிவிட்டு கொள்ள வேண்டும்.

அதற்கு பிறகு, அவர் இறந்த சமயத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பமானது, நினைவூட்டல் வீடியோவை கண்டு அது பிறரின் கேள்விகளுக்கு விடை தரும் விதத்தில் பொருத்தமான பதில்களை தேர்ந்தெடுத்து காண்பிக்கப்படும். அப்போது, உயிரிழந்த நபர் நம்மோடு பேசுவது போன்ற உணர்வை தரும்.

அந்தவகையில் ஒருவர் இறந்த பின்பும் அவருடன் பேச முடியும் என்பதை ஸ்டீபன் ஸ்மித் செயற்கை நுண்ணறிவு மூலம் நிரூபித்துள்ளார்.

பிரித்தானியா

"94 வருட வரலாற்றில் முதன் முறையாக; இப்படியும் ஒரு அழகியா?

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மிஸ் இங்கிலாந்து 2022 அழகி போட்டியில் லண்டன் நகரை சேர்ந்த 20 வயது மெலிசா ராவ்ஃப் இறுதி சுற்றிற்கு முன்னேறியுள்ளார். .

கல்லூரியில் அரசியல் படித்து வரும் மாணவியான இவர் ஒப்பனை எதுவும் இல்லாமலேயே மிஸ் இங்கிலாந்து அழகி போட்டியின் இறுதி சுற்று வரை முன்னேறியுள்ளார்.

மிஸ் இங்கிலாந்து போட்டியின் 94-வது வருட வரலாற்றில் அழகி ஒருவர் முதன்முறையாக ஒப்பனை இல்லாமல் இறுதி சுற்றிற்கு முன்னேறி இருப்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

மேலும் தனது இயற்கையான உள்ளார்ந்த அழகை வெளிப்படுத்தவும் சமூக வலைத்தளங்களில் அழகு பற்றி சொல்லப்படும் நிர்ணயங்கள் மாற்றும் ஒப்பனை இல்லாமல் போட்டியில் பங்கேற்றதாக மெலிசா தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் பல பெண்கள் தங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் சமூக அழுத்தத்தின் காரணமாக ஒப்பனை செய்து கொள்வதாகவும் நமது இயற்கையான தோள் நமக்கு பிடித்திருந்தால் அதை ஒப்பனை என்ற பெயரில் பிறருக்காக மூடி மறைக்க வேண்டாம் என அவர் கூறியுள்ளார்.

தங்கள் மீதான நம்பிக்கையை வளர செய்ததற்காக பல இளம் பெண்கள் தனக்கு நன்றி தெரிவித்திருப்பதாக கூறியுள்ளார்.

மெலிசா அழகு பற்றி அனைத்து படிநிலைகளையும் தான் உடைக்க விரும்புவதாக கூறியுள்ளார். மேலும் மிஸ் இங்கிலாந்து இறுதிப் போட்டியில் மெலிசா வெற்றி பெற வேண்டும் என அவருக்கு தற்போது வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

இரு வேறு தம்பதியினருக்கு பிறந்த அதிசயக் குழந்தைகள்

இரட்டை சகோதரிகளை மணந்த இரட்டை சகோதரர்களுக்கு இரட்டையர்களாக குழந்தை பிறந்த சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இரட்டை சகோதரிகளான பிரிட்டனி, ப்ரியான டீன் ஆகிய இருவரும் இரட்டை சகோதரர்களான ஜோஸ் மற்றும் ஜெரமி சால்யெர்ஸை கடந்த 2017 ஆம் வருடம் நடைபெற்ற இரட்டையர்கள் திருவிழாவில் சந்தித்துள்ளனர். நாளடைவில் 35 வயதான சால்யர்ஸ் சகோதரர்கள் 33 வயதான டீன் சகோதரிகளை காதலித்து கடந்த 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமெரிக்காவின் விர்ஜீனியா மாகாணத்தில் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 2020 ஆம் வருடம் அந்த சகோதரிகள் இருவரும் அதிர்ஷ்டவசமாக ஒரே நேரத்தில் பிரசவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 30 ஓகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.